## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

## CC.No. 352/2022

2026 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 11 ஆம் நாள் செவ்வாய் கிழமை அரசு தரப்பு சாட்சி–07, திரு.அறிவழகன் என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் பிரமாணச் சட்டம் பிரிவு 4 ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.அறிவழகன் | வயது | : | 52/26 |
| த.பெ. | : | மாயக்கிருஷ்ணன் | தொழில் | : | ஓட்டுநர் |
| ஊர் | : | பிச்சனூர் | நிலை | : | LW07 / PW07 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:**

நான் பிச்சனூரில் வசித்து, ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 சுதா என் மனைவி ஆவார். கடந்த 24.09.2022 ம் தேதி நான் வேலைக்கு சென்றுவிட்டேன். அன்றைய தினம் இரவு 07.00–07.10 மணியளவில் சரோஜா என்பவர் எனக்கு போன் செய்து, என் மனைவியை ஆஜர் எதிரி அடித்துவிட்டார் என்றும், அதனால் என் மனைவி மயக்கம் போட்டு விழுந்துவிட்டார் என்றும் அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளதாக சொன்னார். நான் அன்றைய தினம் இரவு 11.00 மணியளவில் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு சென்றுபார்த்தேன்.

அப்போது என் மனைவியின் முடியை பிடித்து இழுத்து, பியத்துவிட்டதாக கூறி முடியை காண்பித்தார். நெஞ்சில் வலியிருப்பதாக கூறினார். என் மனைவியின் தொடையில் காயம் இருந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

உண்மை நகல் /
ஓம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.